RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 133 | மே.21 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் தவறு ஏதுமில்லை: உச்ச நீதிமன்றம்



புதுடெல்லி: மே.21-

நாடு முழுவதும் மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்தும் மத்திய அரசின் முடிவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த தடை விதிக்கக் கோரி சுதாகர் கும்முலா என்பவர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடுத்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜாய்மால்யா பக்சி, விபுல் பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

உச்ச நீதிமன்றம் தனது உத்தரவில், 'மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது சாதிவாரியாக இருக்க வேண்டுமா, இல்லையா என்பது போன்ற அனைத்தும் கொள்கை முடிவுகள். இதில் என்ன தவறு இருக்கிறது?

பிற்படுத்தப்பட்ட வகுப்பில் எத்தனை பேர் உள்ளனர், அவர்களுக்கு எத்தகைய திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அரசு அறிந்திருக்க வேண்டும். இது கொள்கை ரீதியான அதிகார வரம்புக்குள் உள்ளது.

எனவே, இதுபோன்ற தரவுகளைச் சேகரிப்பதில் தவறில்லை. இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிடாது' என தெரிவித்துள்ளது.

சாதிவாரி கணக்கெடுப்பு பின்புலம்:

இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. கடைசியாக 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதற்கு அடுத்தபடியாக 2021ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புக்கான பணிகள் 2020 ஏப்ரல் மாதத்தில் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், கரோனா பெருந்தொற்று பரவியதையடுத்து, இந்த பணி தள்ளிவைக்கப்பட்டது. அதன் பிறகு மக்களவைத் தேர்தல் நடைபெற்றதால் மீண்டும் தள்ளிப்போனது.

இதுவரை ஆதி திராவிடர்கள் (எஸ்.சி.), பழங்குடியினத்தவர் (எஸ்.டி.), இதர பிற்படுத்தப்பட்டோர் (ஓபிசி) மற்றும் பொது பிரிவினர் என 4 பிரிவுகளின் அடிப்படையில் மட்டுமே மக்களை அரசு வகைப்படுத்தி வருகிறது. இதன் அடிப்படையில்தான் தேசிய அளவில் அரசு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவன சேர்க்கையில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பையும் நடத்த வேண்டும் என்று காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்தன. சாதி அடிப்படையில் அரசு வேலை வாய்ப்பு, கல்வி நிறுவன சேர்க்கையில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும் சில கட்சிகள் வலியுறுத்தி வந்தன. இந்நிலையில், நாடு முழுவதும் மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை கூட்டத்தில் கடந்த ஆண்டு மே மாதம் ஒப்புதல் வழங்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

2027ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது அதிகாரப்பூர்வ 16வது தேசிய கணக்கெடுப்பாகும். இது 1931க்குப் பிறகு விரிவான சாதிவாரி கணக்கெடுப்புடன் கூடிய மக்கள்தொகை கணக்கெடுப்பாகும். அதோடு, இது நாட்டின் முதல் முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பாகும் என்பது கவனிக்கத்தக்கது.




# பத்தாம் வகுப்பு முடிவுகள் வெளியீடு: தமிழகத்தில் 94.31% பேர் தேர்ச்சி

## அரசு பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் 91.66%

சென்னை: மே.21-

தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று (மே 20) வெளியானது. தேர்வு எழுதிய மாணவர்களில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது. தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

தமிழக பள்ளிக் கல்வி பாடத் திட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு (மார்ச் 2026) கடந்த மார்ச் 11ம் தேதி தொடங்கி கடந்த ஏப்.6ம் தேதி நிறைவடைந்தது. சுமார் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதினர். தொடர்ந்து விடைத்தாள் திருத்த பணிகள் தொடங்கி நிறைவடைந்தது. இந்நிலையில், இன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

மொத்தம் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதியதாக அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார். இதில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

வழக்கம்போலவே இந்த முறையும் தேர்ச்சி விகிதத்தில் மாணவர்களை காட்டிலும் மாணவிகளே முன்னிலை வகிக்கின்றனர். தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 92.15 சதவீதம், மாணவிகளின் எண்ணிக்கை 96.47 சதவீதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மாணவர்களை விட 4.32 சதவீதம் அதிகமாக மாணவிகள் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

மாவட்ட அளவில் தேர்ச்சி விகிதத்தை பொறுத்தவரையில் புதுக்கோட்டை (97.57%), சிவகங்கை (97.54%), தஞ்சாவூர் (97.41%), திருச்சி (97.31%), கன்னியாகுமரி (97.30%) மாவட்டங்கள் முதல் 5 இடங்களை பிடித்துள்ளன.

அரசு பள்ளிகளின் ஒட்டுமொத்த தேர்ச்சி விகிதம் 91.66 சதவீதம் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

பாட வாரியாக தேர்ச்சி விகிதம்:

தமிழ் 98.43%, ஆங்கிலம் 99.44%, கணிதம் 97.36%, அறிவியல் 98%, சமூக அறிவியல் 97.93%.

நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்ற மாணவர்கள்:

தமிழ் 34 , ஆங்கிலம் 93, கணிதம் 3194, அறிவியல் 10476, சமூக அறிவியல் 3336 மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றுள்ளனர்.

# சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் அமைச்சர் ராஜ்மோகன் ஆய்வு

சென்னை, மே.21-

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன் அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் உள்ள கலையரங்கம், கூட்டரங்கம், கருத்தரங்கம் மற்றும் செந்தமிழ் சிற்பிகள் அரங்கம் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் நூலக வாசகர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள குடிநீர், கழிப்பிட வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். தொடர்ந்து, வளாகத்தில் உள்ள ஆவின் பாலகத்தில் பால் அருந்தி தரத்தினை ஆய்வு செய்து வாசகர்களுடன் கலந்துரையாடினார்.

உடன் பள்ளிக்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தர மோகன், ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் மற்றும் பொது நூலகத் துறை இயக்குநர் எஸ்.ஜெயந்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர். ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ், அரசுத் தேர்வுகள் இயக்குநர் க.சசிகலா, தனியார் பள்ளிகள் இயக்குநர் எஸ்.சுகன்யா, அண்ணா நூற்றாண்டு நூலக முதன்மை நூலகர் காமாட்சி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்டாலின் தலைமையில் ஆலோசனை: உதயநிதி, கனிமொழி உள்ளிட்டோர் பங்கேற்பு



சென்னை: மே.21-

தோல்விக்கான காரணம், தற்போதைய அரசியல் சூழல் குறித்து கட்சி நிர்வாகிகளுடன் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். இதில் உதயநிதி, கனிமொழி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக ஆட்சியை இழந்துள்ள நிலையில் தோல்விக்கான காரணம் குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று தேர்தல் தோல்விக்கான காரணங்கள் குறித்து கள ஆய்வு செய்து வருகின்றனர். இந்நிலையில், திமுக தலைவர் ஸ்டாலின் நேற்று காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இதில் திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி, இளைஞரணி செயலாளர் உதயநிதி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்தும் திமுகவில் அடுத்தகட்டமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஸ்டாலின் விவாதித்ததாக தெரிகிறது.

இளைஞரணி கூட்டம்

இதனிடையே, திமுக இளைஞர் அணி செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "திமுக இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் 23ம் தேதி மாலை 5 மணி அளவில் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

துணைச் செயலாளர்கள் முன்னிலையில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார். இந்தக் கூட்டத்தில் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும். இக்கூட்டத்தில் ஜூன் 3ம் தேதி கருணாநிதி பிறந்தநாள், திமுக இளைஞர் அணி பணிகள் குறித்து விவாதிக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

# நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் பணம் பறிக்கும் இடைத்தரகர்கள் மீது நடவடிக்கை கோரி வழக்கு : லஞ்ச ஒழிப்புத்துறைக்கு ஐகோர்ட் உத்தரவு



சென்னை: மே.21-

தமிழகம் முழுவதும் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் பணம் பறிக்கும் இடைத்தரகர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இது தொடர்பான புகாரை கூட்டுறவுத்துறை மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை இருவாரங்களில் பரிசீலிக்க உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ஏ. வெங்கடேசன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருந்ததாவது:

தமிழகம் முழுவதும் உள்ள மாநில நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தற்போது டோக்கன் நடைமுறை பின்பற்றப்படுகிறது.

இதனால், நெல் கொள்முதல் நிலையங்களில் இடைத்தரகர்கள் தலையிட்டு விவசாயிகளிடம் லஞ்சம் பெறும் நிலை உள்ளது. நெல் கொள்முதல் நிலையங்களில் இடைத்தரகர்களின் தலையீட்டை தடுக்க வேண்டிய அதிகாரிகளும் அவர்களுடன் கூட்டணி அமைத்து செயல்படுவதால், சொந்தமாக நெல்லை விளைவிக்கும் விவசாயிகள் அதை அரசிடம் கொண்டு சேர்ப்பதற்குள் இடைத்தரகர்களிடம் சிக்கி மனதளவில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் லஞ்சம் பெறும் இடைத்தரகர்களின் தலையீட்டை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கும், லஞ்ச ஒழிப்புத்துறைக்கும் உத்தரவிட வேண்டும்.

அத்துடன் நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நேரடியாகவே பதிவு செய்து டோக்கன் பெறும் நடவடிக்கையை உருவாக்க உத்தரவிட வேண்டும். இடைத்தரகர்களின் நடமாட்டத்தை கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி போதிய எண்ணிக்கையில் போலீஸ் பாதுகாப்பும் வழங்க வேண்டும். இவ்வாறு மனுவில் அவர் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி எல்.விக்டோரியா கவுரி முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், இதுதொடர்பாக கடந்த ஆண்டு செப்டம்பரில் அதிகாரிகளிடம் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என வாதிடப்பட்டது. காவல்துறை தரப்பில். தங்களுக்கு இதுதொடர்பாக எந்த புகாரும் வரவில்லை என தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புதிதாக மனு அளிக்க மனுதாரருக்கு உத்தரவிட்ட நீதிபதி, மனுதாரர் தரப்பு கோரிக்கையின் தீவிரத்தை கருத்தில்கொண்டு இதுதொடர்பாக இருவாரங்களில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூட்டுறவுத்துறை செயலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், லஞ்ச ஒழிப்புத்துறை ஆகியோருக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்துள்ளார்.

# மருத்துவத்துறைக்கான புதிய வாகனங்கள் வழங்கும் விழாவில் கார் ஓட்டிய முதல்அமைச்சர் விஜய்

சென்னை, மே.21-

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்அமைச்சர் விஜய் இன்று 2.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக 40 புதிய வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சாவிகளை ஒட்டுநர்களுக்கு வழங்கி, வாகனத்தை இயக்கித் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்ககம், மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலுள்ள ஸ்கேன் மையங்களில் கருவுறுதலுக்கு முன், கருவுறுதலுக்கு பின் பாலின தேர்வு தடைச்சட்டம் 1994ன்படியும் மற்றும் தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம் 1997ன்படியும் சட்ட விதிகள் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும், முறையாக பதிவு பெறப்பட்டு இயக்கப்படுகிறதா என்பதை ஆய்வு மேற்கொள்ளவும்,

பேரிடர் மற்றும் பெருந்தொற்றுக் காலங்களில் மக்களுக்குத் தேவையான மருத்துவப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளவும், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மக்களுக்கு தேவையான உரிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும், போலி மருத்துவர் மீது விரைந்து விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவும் இப்புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.



■ தாராபுரம் டி எஸ் கார்னர் பகுதியில் இருந்து அண்ணா சிலை வரை கேபிள் பணிக்காக தோன்றிய குழிகள் சரிவர மூடப்படாமல் இருந்த காரணத்தினால் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக குழிகள் ஏற்பட்டு பொதுமக்கள் நடப்பதற்கு சிரமமாக உள்ளது என தமிழக வெற்றிக்கழகத்தின் நகர கழக செயலாளர் அபுத்தாஹீர் அவர்களிடம்பொதுமக்கள் முறையிட்டதை அடுத்து அதை நேரில் சென்று பார்வையிட்டு மேலும் பொதுமக்கள் அக்குழியில் விழாமல் இருக்க தடுப்புகள் அமைத்தனர் அதனை அடுத்து உரிய அதிகாரிகளுக்கு அழைத்து பணிகளை விரைவாக மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு தர வேண்டும் என நேரில் சென்று வேண்டுகோள் விடுத்ததை அடுத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது உடனடியாக தீர்வு ஏற்பட நடவடிக்கை எடுத்த த வெ க வின் நகரக் கழக செயலாளர் அபுத்தாஹிர் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் பாராட்டு தெரிவித்தனர்

# தயக்கமின்றி படித்தால் அரசு பணியாளர் தேர்வுகளில் வெற்றி பெறலாம்

பந்தலூர், மே 21-

நீலகிரி மாவட்டம்பந்தலூர் டியூஸ் பள்ளி கூட்ட அரங்கில், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், பவித்ரா தட்டச்சு பயிற்சி மையம், மகாத்மா காந்தி பொது சேவை மையம் மற்றும் டியூஸ் பள்ளி நிர்வாகம் இணைந்து, மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் அகில இந்திய அளவில் 128வது இடம் பெற்ற அருண் வடிவரசனை பாராட்டும் விழாவும், போட்டித் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும், தட்டச்சு பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா என முப்பெரும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம்




தலைமை தாங்கினார். டியூஸ் பள்ளி முதல்வர் சுதீந்திரநாத் வரவேற்றார். மகாத்மா காந்தி பொது சேவை மைய தலைவர் நௌஷாத், பந்தலூர் அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியர் தண்டபாணி, தேவாலா அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் கிருஷ்ணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூடலூர் மின்சார வாரிய செயற்பொறியாளர் முத்துகுமார் மற்றும் கூடலூர் காசிகா ஐஏஎஸ் அகாடமி நிறுவனர் சுரேஷ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அகில இந்திய அளவில் 128வது இடம் பெற்ற அருண் வடிவரசன் பேசுகையில், "பள்ளி பருவத்திலேயே பாடங்களை புரிந்து படிக்க வேண்டும். புரிந்து படித்தால் அது மனதில் நிலைத்து நிற்கும். மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியமும் குறையும். 2019 முதல் மத்திய அரசு பணியாளர் தேர்வுகளுக்குத் தயாராகி வந்தேன். 2022 ஆம் ஆண்டு வனத்துறை பணிகள் குறித்து அறிந்து அதற்கான தயாரிப்பில் தீவிரமாக ஈடுபட்டேன். தொடர்ந்து முயற்சி செய்ததன் பலனாக வெற்றி பெற முடிந்தது," "ஒருநாளைக்கு எவ்வளவு நேரம் படிக்கிறோம் என்பதைக் காட்டிலும், எப்படி படிக்கிறோம் என்பதே முக்கியம். தங்களது சூழ்நிலைக்கு ஏற்ப திட்டமிட்டு முயற்சி செய்தால் போட்டித் தேர்வுகளில் எளிதில் வெற்றி பெற முடியும். தற்போது மத்திய அரசு தேர்வுகளில் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றாலே அரசு மற்றும் சில தன்னார்வ அமைப்புகள் மாதந்தோறும் ரூ.8,000 வரை உதவித்தொகை வழங்குகின்றன. தமிழக அரசு பாடத்திட்டமும் மத்திய மற்றும் மாநில அரசு பணியாளர்கள் போட்டித் தேர்வுகளுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது. தயக்கமின்றி தொடர்ந்து படித்தால் அரசு பணியாளர் தேர்வுகளில் வெற்றி பெறலாம்," என்றார். தொடர்ந்து பந்தலூர் தேவாலா பயிற்சி மையங்களில் தட்டச்சு பயிற்சி முடித்த மாணவர்களுக்கு அரசு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

# குன்னூர் தாலுகா அலுவலகத்தில் பூட்டப்பட்ட பொது மக்கள் கழிப்பறை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளபடுமா?

## பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் கேள்வி!

குன்னூர் மே 21-

குன்னூர் தாலுகா அலுவலகதிற்கு நாள் தோறும் பொது மக்கள் வாரிசு சான்று, வருமான சான்று, இருப்பிட சான்று, உட்பட பல சான்றுகள் விண்ணப்பிக்கவும், விண்ணபித்த சான்றிதழ்கள் பெறுவதற்கும், தினந்தோறும், குன்னூர் தாலுகா அலுவலகதிற்கு வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், உட்பட அனைத்து தரப்பு பொது மக்கள் வந்து செல்லும் நிலையில், தாலுகா அலுவலகத்தில்



பொது மக்கள் பயன்பாட்டிற்கு ரூ.3.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொது மக்கள் கழிப்பறை பூட்டியுள்ள நிலை.பொது மக்கள் பாதிக்கப்டுவார்கள் என தெரிந்தே கழிப்பறை பூட்டியுள்ள நிலையில்,குன்னூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும் அனைத்து தரப்பு மக்களும், கழிப்பறை செல்ல முடியாமல் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கபடாமல் இருக்க,குன்னூர் தாலுகா அலுவலகத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு பூட்டியுள்ள கழிப்பறை திறக்க நீலகிரி மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளுமா!பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் கேள்வி?



■ திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த புத்துக்கோவில் புத்து மாரியம்மன் ஆலயத்தில் முதலமைச்சர் ஜோசப் விஜய் அவரின் வெற்றி பெற்றதைத் தொடர்ந்துமாவட்ட கொள்கை பரப்பு இணை அமைப்பாளர் ஜெகன் தலைமையில் தவெக கட்சி நிர்வாகிகள் சாமி தரிசனம் செய்து கேக் வெட்டி, வெற்றி விழாவை இனிப்புகளை, வழங்கி கொண்டாடினார்கள். மேலும் மாவட்ட கொள்கை பரப்பு இணை அமைப்பாளர் ஜெகன் இல்லத்தில் அனைத்து நிர்வாகிகளுக்கும் அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயலாளர் முனுசாமி கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் பிரகாசம், தவெக நிர்வாகி மோகன்ராஜ் மற்றும் அறங்காவலர், மாவட்ட பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், ஊராட்சி செயலாளர்கள், என ஏராளமானனோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# காவலர் சிதம்பரம் மீது பணியிடை நீக்கம்

பெரியகுளம் மே 21-

தேனி மாவட்டம் பெரியகுளம் காவல் நிலையத்திற்குட்பட்ட தனியார் மதுபானக்கூடத்தில் தென்காசி மாவட்ட காவலர் சிதம்பரம் என்பவர் தனது நண்பருடன் சென்று மதுஅருந்திவிட்டு மதுபோதையில் பிரச்சனை செய்தவரை பெரியகுளம் காவல்துறையினர் விரைந்து சம்பவ இடம் சென்று மேற்படி நபர்கள்மீது பெரியகுளம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்தும், கைது நடவடிக்கை மேற்கொண்டும், சம்பவத்தில் ஈடுபட்ட காவலர் சிதம்பரம் மீது பணியிடை நீக்கம் செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# தேனி மாவட்டத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் : மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி மே. 21-

தேனி மாவட்டம், வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 22.05.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் தேனி மாவட்டத்திலுள்ள பல்வேறு தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு பல்வேறு பணியிடங்களுக்கு வேலைநாடுநர்களை தேர்வு செய்ய உள்ளனர்.



இம்முகாமில் 10ஆம் வகுப்பு மற்றும் அதற்கு கீழ் கல்வித் தகுதியுடையவர்கள்12ஆம் வகுப்பு, ஐடிஐ, பட்டயப் படிப்பு, இளநிலை பட்டப்படிப்புகள், நர்சிங் மற்றும் தையல்பயிற்சி முடித்தவர்கள் ஆகியோர் தங்களது சுயவிபர நகல் மற்றும் கல்விச்சான்றிதழ்களின் நகல்கலுடன் கலந்து கொண்டு தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெறலாம். மேலும் விவரங்களுக்கு 98948 89794 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாய்ப்பினை தேனி மாவட்ட வேலைநாடுநர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.

# முதுமலை புலிகள் காப்பகத்தில் உடல் நலக்குறைவால் வளர்ப்பு ஆண் யானை சேரன் உயிரிழப்பு

கூடலூர் மே,21-

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம், உதகை வனக்கோட்டம், யானை முகாம் சரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அபாயரண்யம் தற்காலிக யானை முகாமில் பராமரிக்கப்பட்டு வந்த வளர்ப்பு ஆண் யானை சேரன் (வயது 40) நேற்று காலை சுமார் 6.00 மணியளவில் உடல்



நலம் பாதிக்கப்பட்டது. உடனடியாக வனக்கால்நடை உதவி மருத்துவர், வனக்கால்நடை மருந்தகம் தெப்பக்காடு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பலனின்றி சேரன் யானை நேற்றுகாலை சுமார் 8.40 மணிக்கு இறந்தது.

# நாகை அருகே கீழ்வேளூர் வடக்குவெளியில் டாஸ்மாக் கடை திடீரென தீப்பற்றி எரிந்ததால் பரபரப்பு!!

நாகை:மே 21-

நாகை கீழ்வேளூர் வடக்குவெளியில் டாஸ்மாக் கடை திடீரென தீப்பற்றி எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் எதிர்ப்பை மீறி செயல்பட்ட டாஸ்டாக் கடை திடீரென தீப்பற்றி எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. வடக்குவெளி டாஸ்மாக் கடையை அகற்றக்கோரி அப்பகுதியினர் தொடர் போராட்டம் நடத்தி வந்தனர். டாஸ்மாக் கடைக்கு மர்ம நபர்கள் தீ வைத்தார்களா? அல்லது வேறேதும் காரணமா ? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்



# கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம் ஜெகதாப் அரசினர் உயர்நிலைப்பள்ளி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 100 சதவீதம் தேர்ச்சி

கிருஷ்ணகிரி,மே,21-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம் ஜெகதாப் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளி மாணவ, மாணவிகள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 100 சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

பள்ளியின் மாணவி ஆரோ ஸ்ரீ 466 மதிப்பெண்கள் பெற்று முதலாவது இடத்தையும், அரியமான் 464 மதிப்பெண்கள் பெற்று இரண்டாவது இடத்தையும், சீனிவாசன் 463 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 15 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் 400 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுள்ளனர். முதல் மூன்று இடம் பிடித்த பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் நந்தகுமார் பொன்னாடை போர்த்தி இனிப்புகள் வழங்கினர். மேலும் உயர்கல்வியை படிக்க அரசு பள்ளிகளில் தேர்வு செய்து படிக்க வேண்டும் எனவும் பள்ளியின் தலைமை ஆசிரியர் அறிவுரை வழங்கினார். 100% தேர்ச்சி பெற செய்த ஆசிரியர்களை தலைமை ஆசிரியர் பாராட்டினார். நிகழ்ச்சியில் பள்ளியின் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

# தாம்பரம் மாவட்ட அரசு மருத்துவமனையில் சட்டமன்ற உறுப்பினர் சரத்குமார் ஆய்வு மருத்துவர்கள் செவிலியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதி

தாம்பரம் மே. 21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் சரத்குமார் தாம்பரம் சானடோரியத்தில் உள்ள செங்கல்பட்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார் மருத்துவமனையின் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்ட

சட்டமன்ற உறுப்பினர் சரத்குமார் மருத்துவமனையை சுத்தமான முறையில் பராமரித்து பொதுமக்களிடம் முகம் சுளிக்காமல் கனிவாக பேசி அவர்களுக்கு உரிய சிகிச்சையை தாமதம் இன்றி வழங்க மருத்துவர் கேட்டுக் கொண்டார் அதன் பிறகு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த சட்டமன்ற உறுப்பினர் சரத்குமார் கூறுகையில் தாம்பரம் சானடோரியத்தில் உள்ள அரசு தலைமை மாவட்ட மருத்துவமனையில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஆய்வு மேற்கொண்டேன்






இந்த மருத்துவமனை பொறுத்தவரை மருத்துவர்கள் செவிலியர்கள் போதிய அளவில் இல்லை பற்றாக்குறை உள்ளது அனைத்து துறைகளிலும் உரிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமனம் செய்து பொதுமக்களுக்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அரசிடம் வலியுறுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன்

மருத்துவமனை முழுவதும் ஆய்வு மேற்கொண்டோம் பல இடங்களில் சுகாதார சீர்கேடு இருந்தது அவற்றை சீர் செய்ய அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளேன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும் பொது மக்களிடம் கனிவாக பேசி அவர்கள் கூறிய சிகிச்சை அளிக்க மருத்துவமனை ஊழியர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளேன் 108 ஆம்புலன்ஸ் வசதி உட்பட அனைத்து வசதிகளையும் மேம்படுத்தி அனைத்து சிகிச்சைகளுக்கும் சென்னைக்கு செல்லாமல் தாம்பரம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கும் வகையில் பல்நோக்கு வசதி கொண்ட மருத்துவமனையாக இதை மாற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

அதேபோல தாம்பரம் பகுதியில் உள்ள அம்மா உணவகங்கள் ஆய்வு மேற்கொண்டேன் பல இடங்களில் சுகாதாரமான கண்ணீர் இல்லை போதிய பராமரிப்பு இல்லாமல் அம்மா உணவகங்கள் செயல்பட்டு வரும் நிலையில் அவற்றை சீர்படுத்தி புதிய பொலிவுடன் பொதுமக்களுக்கு சேவை செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க அதிகாரிகளைகேட்டுக் கொண்டுள்ளேன் அம்மா உணவகங்களை சீரமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர் தாம்பரம் சேலையூர் காமராஜபுரம் பேருந்து நிலையம் பகுதியில் உள்ள அம்மா உணவகங்கள் சீரமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு சிறப்பாக செயல்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்இதில் மாவட்ட இணைச் செயலாளர் விஜய் தியாகு மேற்கு பகுதி செயலாளர் பிரவீன் மற்றும் தவெக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்




# கோடை வெயிலை முன்னிட்டு காவேரிப்பட்டணத்தில் தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு

காவேரிப்பட்டணம், மே 21-

கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களின் தாகத்தை தணிக்கும் வகையில் காவேரிப்பட்டணத்தில் தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி, இளநீர், மோர், வெள்ளரி மற்றும் பழச்சாறு உள்ளிட்ட குளிர்பானங்களை வழங்கினார். வெயிலால் அவதிப்பட்ட பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்று பயன்பெற்றனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணைத்தலைவர் செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர், சென்னகேசவன், மாவட்ட இளைஞரணி நிர்வாகி சங்கர் தாஸ், ஆசிரியர் ரவி, ராம்குமார், கீதா, ஞானசேகர், சோபன்பாபு, சின்ராஜ், லோகா பிராமன், தினேஷ், சிற்றரசு, முத்து, இளையராஜா, பிரகாஷ், முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மேலும், பொதுமக்களுக்கு தேவையான நேரங்களில் தொடர்ந்து இதுபோன்ற சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தி.மு.க. நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# ஆன்லைன் மருந்து விற்பனைக்கு எதிர்ப்புகிருஷ்ணகிரி மாவட்டத்தில் 900க்கும் மேற்பட்ட மருந்து விற்பனையாளர்கள் வேலைநிறுத்தம்

## "தமிழ்நாட்டில் 42 ஆயிரம் மருந்தகங்கள் மூடப்படும் அபாயம்" – மருந்து விற்பனையாளர்கள் எச்சரிக்கை







கிருஷ்ணகிரி, மே 21-

ஆன்லைன் மூலம் மருந்துகள் விற்பனை செய்யப்படுவதை கண்டித்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று 900 க்கும் மேற்பட்ட மருந்து விற்பனையாளர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் மாவட்டம் முழுவதும் பல மருந்தகங்கள் மூடப்பட்டு இருந்தன. இந்த வேலைநிறுத்தம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற மாநில அளவிலான போராட்டத்தின் ஒரு பகுதியாகும். ஆன்லைன் மருந்து விற்பனை அதிகரிப்பால் சிறு மற்றும் நடுத்தர மருந்தகங்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன என்றும், பொதுமக்களின் உயிர் பாதுகாப்புக்கும் இது ஆபத்தாக அமையக்கூடும் என்றும் மருந்து விற்பனையாளர்கள் தெரிவித்தனர். மேலும், மருத்துவர் பரிந்துரை இல்லாமல் இணையத்தின் மூலம் மருந்துகள் எளிதில் கிடைப்பதால் தவறான பயன்பாடு அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகவும் அவர்கள் குற்றம்சாட்டினர். குறிப்பாக போலி மருந்துகள் மற்றும் காலாவதியான மருந்துகள் விற்பனை செய்யப்படும் சூழல் உருவாகலாம் என்றும் எச்சரித்தனர். இதுகுறித்து கிருஷ்ணகிரி மண்டல தலைவர் ராமசாமி, செயலாளர் ஜெகநாதன், பொருளாளர் வசந்தகுமார் ஆகியோர் கூறுகையில், "ஆன்லைன் மருந்து விற்பனைக்கு கட்டுப்பாடு விதிக்கப்படாவிட்டால் தமிழ்நாட்டில் உள்ள 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருந்தகங்கள் மூடப்படும் நிலை உருவாகும். இதனால் ஆயிரக்கணக்கான மருந்தாளுநர்கள் மற்றும் தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் உள்ளது," என்றனர். மேலும், மத்திய மற்றும் மாநில அரசுகள் உடனடியாக தலையிட்டு ஆன்லைன் மருந்து விற்பனைக்கு கடுமையான விதிமுறைகள் கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

# மாற்றுத்திறனாளி இளைஞர் வைத்த கோரிக்கையை ஏற்று தரையில் அமர்ந்து பேசிய தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர்



தாம்பரம் மே.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் கிருஷ்ணா நகர் பகுதியைச் சேர்ந்த ரங்கராஜ் (30) என்ற மாற்றுத்திறனாளி இளைஞர், இன்று தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் சரத்குமாரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். தனக்கு இதுவரை எந்தவித வேலைவாய்ப்பும் கிடைக்காததால் கடும் பொருளாதார சிரமத்திற்கு ஆளாகியிருப்பதாகவும், தனது வாழ்வாதாரத்தை மேம்படுத்த தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு ஒன்றை ஏற்படுத்தித் தருமாறும் அந்த மனுவில் அவர் உருக்கமாகக் குறிப்பிட்டிருந்தார்.

இளைஞரின் நிலையைக் கண்டு நெகிழ்ந்த சட்டமன்ற உறுப்பினர் சரத்குமார், சற்றும் யோசிக்காமல் மாற்றுத்திறனாளி இளைஞர் ரங்கராஜுடன் தரையில் சமமாக அமர்ந்து, அவரது குறைகளை மிகவும் கனிவோடு கேட்டறிந்தார். உங்களது சூழ்நிலையை நான் முழுமையாகப் புரிந்து கொள்கிறேன். மிக விரைவில் உங்களது தகுதிக்கேற்ற நல்லதொரு வேலைவாய்ப்பை நிச்சயம் ஏற்படுத்தித் தருகிறேன்; கவலைப்படாதீர்கள், என்று அவரிடம் கையைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர் உறுதியளித்தார். சட்டமன்ற உறுப்பினரின் இந்த அன்பான அணுகுமுறையாலும், உறுதியான வார்த்தைகளாலும் பெரும் நிம்மதியடைந்த இளைஞர் ரங்கராஜ், முகத்தில் புன்னகையோடு அங்கிருந்து விடைபெற்றுச் சென்றார். அதிகார பெருமை எதுவுமின்றி, ஒரு மாற்றுத்திறனாளி இளைஞருக்காகச் சட்டமன்ற உறுப்பினர் தரையில் அமர்ந்து குறைகளைக் கேட்டறிந்த இந்த நெகிழ்ச்சியான சம்பவம், அங்கிருந்த பொதுமக்களிடையே பெரும் நெகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

# பழனி அருகே உள்ள பி ஆர் ஜி கல்வி குழுமம் தொடர்ந்து சாதனை.. பத்தாம் வகுப்பு தேர்வில் மாவட்ட அளவில் மூன்று மற்றும் நான்காம் இடம் பிடித்தது




பழனி மே 21-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள பி ஆர் ஜி வேலப்ப நாயுடு மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி பள்ளி தொடர்ந்து பல வருடங்களாக பன்னிரண்டு மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சியில் சாதனை படைத்து வருகிறது..அதேபோல் இந்த வருடம் பத்தாம் வகுப்பு தேர்ச்சியில் பழனி கல்வி மாவட்டத்தில் ஜோசிகா என்ற மாணவி 494 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தையும் ,அருண் என்ற மாணவன் 493 மதிப்பெண்கள் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றுள்ளனர். முன்னதாக நெய்க்காரப்பட்டியை சேர்ந்த கணேசன் என்பவரின் புதல்வி ஜோஷிகா பழனி கல்வி மாவட்டத்தில் மூன்றாம் இடம் பிடித்த சாதனை படைத்துள்ளார். தொடர்ந்து பத்திரிக்கையாளர்களடம் பேசிய அவர் என்னுடைய வெற்றிக்கு பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள், நண்பர்கள் மற்றும் என் பெற்றோர்கள் என அனைவரும் உதவினர் .இதனால் மட்டுமே என்னால் இந்த சாதனையை செய்ய முடிந்தது என தெரிவித்தார். மேலும் நரிக்கள்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த நெசவுத் தொழில் செய்து வரும் பாலசுப்பிரமணி என்பவரின் புதல்வன் 493 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடம் பிடித்துள்ளார் . இதனிடையே சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளை பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள் ,சமூக அலுவலர்கள் என அனைவரும் பாராட்டி வருகின்றனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த எலவம்பட்டி ஊராட்சி தம்மன் வட்டத்தில் சுமார் 20 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு 50 வருடங்களாக பொது வழி உள்ளது அந்த பொது வழிப்பாதையை கடந்த ஒரு வருட காலமாக திருப்பதி எனும் தனிநபர் வழியை அடைத்து பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தி வருகிறார். பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் பொது வழியில் செல்ல முடியாமல் தவிக்கின்றனர். மேலும் பொதுமக்கள் விவசாயிகள் என அனைவரும் வேலைக்கு செல்வதற்கு பொது வழி இல்லாமல் தவித்து வருகின்ற நிலை உள்ளது. இரண்டு முறை மாவட்ட ஆட்சியரிடம் பொது வழி அமைத்துத் தருமாறு மனு அளித்திருந்தோம் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொதுமக்கள் பொது வழியை பயன்படுத்த சென்றால் அந்த தனிநபர் பொது மக்களுக்கு அச்சுறுத்தலும் கொலை மிரட்டல் விடுத்து வருகின்றார். ஆகையால் இன்று திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி மனு அளித்துள்ளோம். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கூறினார்

# மின்சாரம் தாக்கியதில் தம்பதி உள்ளிட்ட 3 பேர் ஆத்தூரில் உயிரிழப்பு

திண்டுக்கல்:மே 21-

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூரில் மின்கம்பி அறுந்து விழுந்து கணவன், மனைவி மற்றும் கல்லூரி மாணவர் உயிரிழந்தனர்.ஆத்தூர் அக்ரஹாரத்தைச் சேர்ந்தவர் கருப்பையா (41). கொத்தனார். இவரது மனைவி சுதா (37). இவர்கள் அப்பகுதியில் உள்ள மாடி வீட்டில் குடியிருந்து வந்தனர். நேற்று முன்தினம் இரவு பலத்த காற்றுடன் மழை பெய்ததால் வீட்டு மாடியில் மின் கம்பி அறுந்து விழுந்தது.இதை அறியாமல் கருப்பையா அதை மிதித்ததால் மின்சாரம் பாய்ந்தது. இவரின் அலறல் சத்தம் கேட்டுவந்த மனைவி சுதா மீதும் மின்சாரம் பாய்ந்தது. இவர்களை காப்பாற்ற கீழ் வீட்டில் இருந்து வந்த கல்லூரி மாணவர் சுப்பிரமணிய சிவா (18) மீதும் மின்சாரம் பாய்ந்தது. இதில் 3 பேரும் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர். இதுகுறித்து செம்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "நம்மை பலப்படுத்தி கொண்டால் திமுக வெற்றி சாத்தியமாகும்" கனிமொழி எம்.பி. விளக்கம்



தூத்துக்குடி:மே 21-

நம்மை பலப்படுத்திக் கொண்டால் யாரும் இல்லாமல் திமுகவால் வெற்றி பெற முடியும் என கட்சி நிர்வாகிகளிடம் கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. சட்டப்பேரவை உறுப்பினர்கள் மார்க்கண்டேயன் (விளாத்திகுளம்), கருணாநிதி (கோவில்பட்டி), தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் பி.கீதாஜீவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கனிமொழி பேசியதாவது: நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் நாம் எதிர்பாராத வகையில் தோல்வியை தழுவியுள்ளோம். அதுகுறித்து ஆய்வு செய்ய, தலைவர் ஸ்டாலின் குழு அமைத்துள்ளார். அந்த குழுவினரிடம் கட்சி நிர்வாகிகள் உண்மை நிலவரங்களை தயக்கமின்றி கூற வேண்டும். அது நமது கட்சியை மறுகட்டமைப்பு செய்ய உதவியாக இருக்கும். மேலும், கூட்டணி பற்றி சிந்திக்க வேண்டிய காலக்கட்டத்தில் இருக்கிறோம். நம்மை நாம் பலப்படுத்திக் கொண்டால், யாரும் இல்லாமல் திமுகவால் வெற்றி பெற முடியும். இவ்வாறு பேசினார். வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பது, ஜூன் 3 கருணாநிதி பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# சென்னையில் சிறுவர்களை வைத்து கஞ்சா விற்பனை.. நான்கு பேர் கைது

சென்னை:மே 21-

சென்னை மாதவரத்தில் கஞ்சா கடத்தி வருவதாக மாதவரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டருக்கு ரகசிய தகவல் நேற்று இரவு கிடைத்துள்ளது. அதன் பேரில் சிறப்பு தனிப்படை போலீசார் மாதவரத்தில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.அப்போது 2 சிறுவர்கள் இரு சக்கர வாகனத்தில் கையில் பையுடன் சந்தேகத்திற்கு ஏற்ப சென்று கொண்டிருந்தனர். அவர்களை நிறுத்தி சோதனை செய்த போது அவர்களிடம் இருந்து அரை கிலோ கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அவர்களிடம் நடத்திய விசாரணையில், அவர்கள் கஞ்சாவை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக எடுத்து வந்தது தெரிந்தது. மேலும் அவர்களிடம் நடத்திய விசாரணையில் கஞ்சா விற்பனை செய்த வியாபாரி மாதவரம் அடுத்த பால்பண்ணை மாத்தூர் பால சுப்பிரமணியன் நகரை சேர்ந்த பழைய இரும்புக் கடை வைத்திருக்ககும் ராமமூர்த்தி மற்றும் கதிர்வேல் என தெரியவந்தது.

இதனையடுத்து ராமமூர்த்தி நடத்தி வந்த இரும்பு கடையை சோதனை செய்த போது 18 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். இவர்கள் ஒடிசா மாநிலத்தில் இருந்து குறைந்த விலைக்கு கஞ்சாவை வாங்கி வந்து அதிக விலைக்கு விற்பதாக விசாரணையில் தெரியவந்தது. போலீசார் அவர்கள் நால்வர் மீதும் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்

# கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு கூடுதல் உணவுப் பொருட்கள் ஒதுக்கீடு மற்றும் சிறப்பு மருத்துவர்கள் நியமனம் கோரிமருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் கே.ஜி. அருண்ராஜிடம் எம்.எல்.ஏ. முகுந்தன் நேரில் மனு



கிருஷ்ணகிரி, மே,21-

சென்னை தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மருத்துவர் அருண் ராஜை கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் றி. முகுந்தன் நேரில் சந்தித்து, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளிகளுக்கான உணவுப் பொருட்கள் ஒதுக்கீட்டை உயர்த்துதல் மற்றும் நரம்பியல், இருதய சிகிச்சை பிரிவுகளுக்கு புதிய சிறப்பு மருத்துவர்களை நியமித்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார். அந்த மனுவில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சமீபத்தில் மேற்கொண்டகள ஆய்வின்போது, மருத்துவமனை நிர்வாகம், மருத்துவர்கள் மற்றும் பொதுமக்கள் தரப்பில் பல அவசர தேவைகள் தமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மருத்துவமனை தொடங்கப்பட்ட காலத்தில் நாளொன்றுக்கு சுமார் 400 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்ற நிலையில், மாதந்தோறும் 2,500 கிலோ அரிசி மற்றும் தேவைக்கேற்ப பால், காய்கறிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், தற்போது தினசரி 1,200க்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அதே பழைய அளவிலேயே உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதால் கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், ஏழை எளிய நோயாளிகளுக்கு தரமான உணவு வழங்குவதில் சிக்கல்கள் உருவாகி வருவதாக தெரிவித்து, தற்போதைய நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அரிசி, பால் மற்றும் காய்கறிகளின் ஒதுக்கீட்டை மும்மடங்காக உயர்த்திட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநில எல்லைகளை இணைக்கும் முக்கியப் பகுதியாகவும், நான்கு தேசிய நெடுஞ்சாலைகள் சந்திக்கும் மையமாகவும் உள்ளதால், சாலை விபத்துகள் மற்றும் அவசர மருத்துவச் சிகிச்சை தேவைகள் அதிகமாக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இத்தகைய சூழலில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நரம்பியல் (Neurology) மற்றும் இருதய சிகிச்சை (Cardiology) பிரிவுகளில் போதிய மருத்துவ வல்லுநர்கள் இல்லாததால், தலைக்காயம் மற்றும் மாரடைப்பு போன்ற அவசரநிலை நோயாளிகள் தர்மபுரி அரசு மருத்துவமனை அல்லது பெங்களூரு மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட வேண்டிய நிலை தொடர்வதாகவும் அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார். இதனால் "Golden Hour" எனப்படும் உயிர் காக்கும் முக்கிய நேரம் வீணாகி உயிரிழப்புகள் ஏற்படுவதற்கான அபாயம் அதிகரித்துள்ளதாக தெரிவித்த அவர், நரம்பியல் மற்றும் இருதய சிகிச்சைப் பிரிவுகளுக்கு தகுதிவாய்ந்த சிறப்பு மருத்துவர்களை உடனடியாக நியமிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அதேபோல், அஞ்செட்டி, தளி, சூளகிரி, தேன்கனிக்கோட்டை, இராயக்கோட்டை உள்ளிட்ட மலைப்பகுதிகள் அதிகம் கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய்க்கடி, பாம்புக்கடி மற்றும் விஷ பூச்சிக்கடிகளுக்குத் தேவையான உயிர்காக்கும் அவசர மருந்துகள் போதுமான அளவில் எப்போதும் கையிருப்பில் வைத்திருக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த கோரிக்கைகள் அனைத்தையும் கவனமாக கேட்டறிந்த அமைச்சர் மருத்துவர் அருண் ராஜ் ,பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சிலம்பப் போட்டியில் சாதித்த மானாமதுரை மாணவ மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டு

சிவகங்கை மே,21-

சிவகங்கை தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை சார்பில் தேனி மாவட்டம் ராயப்பன்பட்டியில் கடந்த ஜனவரி 4 முதல் 7 வரை நடைபெற்ற மாநில அளவிலான சிலம்பப் போட்டிகளில், சிவகங்கை மாவட்ட மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர். மு. ரித்தீஸ் இரட்டைக்கம்பு 17 வயது பிரிவில் முதலிடமும், அகதீஸ்குமார் ஒற்றைக்கம்பு 19 வயது பிரிவில் முதலிடமும், புகழேஷ் இரட்டைக்கம்பு 14 வயது பிரிவில் முதலிடமும், மதன்குமார் ஒற்றைக்கம்பு 17 வயது பிரிவில் இரண்டாமிடமும் பெற்றனர்.மேலும் மாவட்ட மற்றும் வட்டார அளவிலான போட்டிகளில் மாணவர்கள் கரண்குமார், ஷெரோன், மாணவிகள் சுவாதி, ஷாலினி, ரோஷினி மற்றும் ராஜேஷ் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். சாதனை படைத்த மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர் சீனி ஆசான் சிலம்பம் பள்ளி பயிற்சியாளர் செல்வத்தை, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா. பொற்கொடி நேரில் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

## “விக்சித் பாரத் 2047: கல்வி, திறன்கள் மற்றும் தொழில்முனைவோரின் பங்கு” என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசியப் பயிலரங்கம்

காரைக்கால்.மே. 21-

காரைக்காலில் தேசிய அளவிலான பயிலரங்கம் பெருந்தலைவர் காமராசர் கல்வியியல் கல்லூரி சார்பில் “விக்சித் பாரத் 2047: கல்வி, திறன்கள் மற்றும் தொழில்முனைவோரின் பங்கு” என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசியப் பயிலரங்கம் மே 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. தொடக்க விழாவிற்கு கல்லூரி முதல்வரும் ஒருங்கிணைப்பாளருமான டாக்டர் ஆர். கந்தவேல் வரவேற்புரை வழங்கினார். உயர்கல்வித்துறை மற்றும் தொழில் நுட்ப இயக்குனரகம் உறுப்பினர் செயலாளர் (கூடுதல் பொறுப்பு) மற்றும் இயக்குநர் உடன் அரசுச் செயலரான திரு பி. முத்துமீனா விழாவைத் தொடங்கி வைத்தார். காரைக்காலில் உள்ள தேசிய தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் டாக்டர் மகரந்த் மதாவ் காங்க்ரேகர் தலைமை உரையாற்றினார். புதுவை பல்கலைக்கழகத்தின் கல்வித்துரையின் டீன் டாக்டர் இ. ஸ்ரீகலா முக்கிய உரையாற்றினார். தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழக கல்வித் துறை இணைப் பேராசிரியர் டாக்டர் பீமப்பா ரங்கண்ணவர் மற்றும் புதுச்சேரி வேளாண்மை மற்றும் அறிவியல் துறையின் தலைவர் டாக்டர் சி. கணேஷ் சிறப்புரையாற்றினர். அழகப்பா பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறைத் தலைவர் டாக்டர் என். ஜான்சன் வாழ்த்துரையாற்றினார். நிறைவு விழாவில் காந்திகிராம் பல்கலைக்கழக நிறுவனத்தின் துணைவேந்தர், டாக்டர் என். பஞ்சநாதம் நிறைவு உரையாற்றினார். இவ்விழாவில் அவர் வழங்கிய செய்திகுறிப்பில் விக்சித் பாரத் 2047* என்பது சுதந்திரத்தின் 100வது ஆண்டில் இந்தியாவை முழு வளர்ச்சியடைந்த நாடாக்கும் தேசிய தொலைநோக்கு. தரமான கல்வி, பசுமை ஆற்றல், திறன்மிகு இளைஞர்கள் மூலம் ஷிஜிநி இலக்குகள் மற்றும் 30 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் எட்டுவதே இலக்கு என்று கூறினார். அழகப்பா பல்கலைக்கழக இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறைத் தலைவர் முனைவர் ஜான்சன் அவர்கள், “விக்சித் பாரத்திற்கான டிஜிட்டல் திறன்கள்: தேசிய கல்விக் கொள்கை 2020 மற்றும் அதன் தொடர்ச்சி” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அறிஞர் அண்ணா அறிவியல் மற்றும் கலைக்கல்லூரியின் முதல்வர் டாக்டர் எம்.டி. அசாத் ரஸா வாழ்த்துரையாற்றினார். இந்த தேசியப் பணிமனையில் கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு ஆகியவை இந்தியாவை 2047க்குள் வளர்ந்த நாடாக மாற்றுவதில் வகிக்கும் முக்கிய பங்கை வலியுறுத்தப்பட்டது. பல கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆய்வா ளர்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.





## சிவகங்கை மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு பள்ளி மாநில அளவில் முதலிடம்

சிவகங்கை,மே,21-

சிவகங்கை மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு பள்ளி மாநில அளவில் முதலிடம்2025 26 ஆம் கல்வியாண்டு 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் சிவகங்கை மாவட்டம் மாநில அளவில் 97.54 % விழுக்காட்டுடன் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. அரசுப்பள்ளிகளுக்கான தேர்ச்சியில் 97.42% விழுக்காட்டுடன் முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்விலும் சிவகங்கை மாவட்டம் மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்திருந்தது.




இந்த மகத்தான வெற்றிக்காக பாடுபட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் திறமையான தலைமையின் கீழ் பணியாற்றிய அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கும் அனைத்து அலுவலர்களுக்கும் தலைமையாசிரியர்களுக்கும், பாட ஆசிரியர்களுக்கும், தங்கள் குழந்தைகளை தொடர்ந்து ஊக்குவித்த பெற்றோர்களுக்கும். விடுதிகளில் மாணவர்களுக்கு முழு அர்ப்பணிப்புடன் ஆதரவளித்த விடுதிக் காப்பாளர்களுக்கும் தங்களது பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றிய அனைத்து அலுவலகப் பணியாளர்களுக்கும், அன்பிற்கினிய மாணவச் செல்வங்களுக்கும் என் இதயம் கனிந்த பாராட்டுகளைத் மாவட்ட ஆட்சியர் பொற்கொடி தெரிவித்துக் கொண்டார்.

மேலும் தேர்வில் தேர்ச்சிபெற தவறிய மாணவர்கள் உடனடி தேர்விற்கு விண்ணப்பித்து அனைவரும் தேர்ச்சியடைய எனது தெரிவித்துக்கொள்கிறேன். என்றார்.

## “மாமதுரையை தூய்மை நகரமாக மாற்றுவோம்”வக்பு வாரிய கல்லூரியில் மாபெரும் தூய்மை இயக்கம் தொடக்கம்ஆட்சியர் பிரவீன் குமார் - எம்.எல்.ஏ. கல்லாணை பங்கேற்பு

மதுரை, மே 21-

மதுரையை தூய்மை மிகு நகரமாக மாற்றும் நோக்கில், மதுரை வடக்கு வட்டம் வக்பு வாரியக் கல்லூரி வளாகத்தில் மாபெரும் தூய்மை இயக்கம் இன்று தொடங்கப்பட்டது.இந்த தூய்மை பணிகளை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் மற்றும் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ. கல்லாணை ஆகியோர் தொடங்கி வைத்தனர்.நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியதாவது:

“மதுரை மாநகரை தூய்மை மிகு நகரமாக மாற்றுவது பொதுமக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாகும். இதற்காக அரசு மற்றும் மாநகராட்சி நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதற்கு பொதுமக்களின் முழு ஒத்துழைப்பும் அவசியம்,'' என்றார்.

மேலும், எம்.எல்.ஏ.வின் கோரிக்கையை ஏற்று மாநகராட்சி சார்பில் மாணவர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் மாபெரும் தூய்மை இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.இந்த இயக்கத்தில் 200க்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள், மாநகராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து வக்பு வாரியக் கல்லூரி வளாகத்தை தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர்.“தூய்மை பணி என்பது ஒருநாள் செயல் அல்ல. குப்பைகளை அகற்றுவதோடு மட்டுமல்லாமல், குப்பைகளை சரியான முறையில் கையாளும் பழக்கத்தையும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்,'' என ஆட்சியர் வலியுறுத்தினார்.மேலும், அதிகாலை வேலைக்கு செல்லும் தினக்கூலி தொழிலாளர்களின் வசதிக்காக சில பகுதிகளில் மாநகராட்சி தூய்மை வாகனங்கள் அதிகாலை நேரத்திலேயே சென்று குப்பைகளை சேகரிக்க ஏற்பாடு செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.மதுரை மாநகராட்சியின் பல்வேறு பகுதிகள், சுற்றுலாத் தளங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் இதுபோன்ற தூய்மை பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும், பொதுஇடங்களில் குப்பை ப கொட்டுவதை தடுக்க கண்காணிப்பு கேமராக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி உதவி ஆணையாளர் ரவிக்குமார், வக்பு வாரியக் கல்லூரி முதல்வர் வேலுச்சாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





## மதுரையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் மீண்டும் தொடக்கம்

மதுரை, மே,21-

மதுரை மாநகராட்சி சார்பில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் நடத்தப்பட்டு வந்த பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம், சட்டமன்ற தேர்தல் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் தொடங்கப்படுகிறது. மதுரை மாநகராட்சியின் 100 வார்டுகளுக்குட்பட்ட பொதுமக்களின் குறைகளை தீர்க்கும் வகையில் 5 மண்டல அலுவலகங்களில் குறைதீர்க்கும் முகாம்கள் நடத்தப்பட்டு வந்தன. இதில் குடிநீர், பாதாள சாக்கடை இணைப்பு, வீட்டு வரி பெயர் மாற்றம், புதிய சொத்து வரி விதிப்பு, கட்டிட வரைபட அனுமதி, தெருவிளக்கு, தொழில்வரி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. தற்போது தேர்தல் முடிவடைந்து விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளதால், மீண்டும் குறைதீர்க்கும் முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, வருகின்ற 26ம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மாநகராட்சியின் 5 மண்டல அலுவலகங்களிலும் உதவி ஆணையாளர்கள் தலைமையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற உள்ளது.



■ மதுரை மாநகராட்சி மண்டலம்1 வார்டு எண் 16,கோ.புதூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள காய்ச்சல் வார்டு, பதிவு செய்யும் இடம் பார்வையிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்துமாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்

## மினி கூப்பர் எஸ் ஜிபி

சென்னை,மே,21-

மினி நிறுவனம், மினி கூப்பர் எஸ் ஜிபி இன்ஸ்பயர்டு எடிஷன் காரை இந்தியச் சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. இதில் 2.0 லிட்டர் 4 சிலிண்டர் டர்போ பெட்ரோல் பி48 இன்ஜின்இடம் பெற்றுள்ளது. இது அதிகபட்சமாக 201 பிஎச்பி பவரையும் 300 என்எம் டார்க்கையும் வெளிப்படுத்தும். 7 ஸ்பீடு டுயல் கிளட்ச் ஆட்டோமேட்டிக் டிரான்ஸ்மிஷன் உள்ளது. 100 கிலோ மீட்டர் வேகத்தை 6.6 நொடிகளில் எட்டும். 7 ஸ்பீடு ஆட்டோமேட்டிக் கியர் பாக்ஸ் உள்ளது. ஸ்பெஷல் எடிஷனான இது அதிகபட்சம் 30 கார்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட உள்ளன. முன்பதிவு செய்தவர்களுக்கு இந்த மாத இறுதியில் கார்கள் டெலிவரி செய்யப்படும் என நிறுவன தரப்பில் கூறப்பட்டுள்ளது. விலை விவரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இதன் ஸ்டாண்டர்டு வேரியண்டான ஜெசிடபிள்யூ பேக் உடன் கூடிய கூப்பர் எஸ் ஷோரூம் விலை சுமார் ரூ.61.50 லட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது

## உயர்திரு வருவாய் கோட்டாசியர் அவர்கள், திண்டுக்கல்

திரு. காளிமுத்து
த/பெ. பழனிச்சாமி
சுந்தரராஜபுரம் செங்கட்டாம் பட்டி கிராமம் நிலக்கோட்டை வட்டம்,திண்டுக்கல் மாவட்டம்.

....மனுதாரர்

எதிர்

1. வருவாய் கோட்டாசியர் அவர்கள் திண்டுக்கல்.
2. வருவாய் வட்டாட்சியர் நிலக்கோட்டை.

...எதிர் மனுதாரர்

பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தந்தை பழனிச்சாமி அவர்கள் கடந்த 10.06.1982 அன்று காளிமுத்து த/பெ. பழனிச்சாமி சுந்தரராஜபுரம் செங்கட்டாம் பட்டி கிராமம் நிலக்கோட்டை வட்டம்,திண்டுக்கல் மாவட்டம் என்ற விலாசத்தில் இயற்கை மரணம் அடைந்ததற்கான இறப்பு சான்றிதழ் கோரி விண்ணப்பித்துள்ளார். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின், இவ்வறிவிப்பு கண்ட 7 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாசியர் சமூகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரர் கோரியபடி மனு உத்தரவாகும் என்பதை இதன் மூலம் அறியவும்.

வருவாய் கோட்டாசியர்
திண்டுக்கல் மாவட்டம்.

## திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது

திருப்பூர் மே,21-


திருப்பூர்,மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலம் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 22.05.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை திருப்பூர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் (அறை எண்.439) நடைபெறவுள்ளது. திருப்பூர் மாவட்டத்தை சார்ந்த முன்னணி தனியார்துறை நிறுவனங்கள் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலைநாடுநர்களை தேர்வு செய்யவுள்ளார்கள்.

வேலையளிக்கும் நிறுவனங்களால் தேர்வு செய்யப்படும் வேலைநாடுநர்களுக்கு முகாம் நாளன்று பணிநியமன ஆணை வழங்கப்படும். இந்த வேலைவாய்ப்பு முகாமில் 10 ஆம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்தவர்கள் மற்றும் பட்டப்படிப்பு படித்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம். முகாமில் கலந்து கொள்ளும் வேலைநாடுநர்கள் (Candidates) தங்கள் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அட்டை மற்றும் சுயதகவல் (Resume) படிவத்துடன் கலந்து கொள்ளலாம். மேலும் இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள நிறுவனங்கள் (Employer) தங்களுக்கு தேவையான காலியிடங்களை நிரப்பிட உரிய விவரங்களுடன் https://www.tnprivatejobs.tn.gov.in/ என்ற தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையத்தில் முன்பதிவு செய்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது. மேலும் வேலைநாடுநர்களும் (Candidates) தங்களின் விவரங்களை https://www.tnprivatejobs.tn.gov.in/ என்ற தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. இந்த தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள எவ்விக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனவே திருப்பூர் மாவட்டத்தில் உள்ள வேலைநாடுநர்கள் இம்முகாமில் பங்கேற்று தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு 9499055944 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே கேட்டுக்கொண்டுள்ளார்.

## நெல்லை மாவட்டம் பழவூர் அருகே கார் மோதிய விபத்தில் 2 சிறுவர்கள் உயிரிழப்பு!!

நெல்லை:மே,21-

நெல்லை மாவட்டம் பழவூர் அருகே கார் மோதிய விபத்தில் 12 வயது சிறுவர்கள் 2 பேர் உயிரிழந்தார். நெல்லையில் இருந்து குமரி நோக்கி சென்ற கார் பழவூர் அருகே சாலையோரம் நடந்து சென்ற சிறுவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. அதிவேகமாக சென்ற கார் மோதிய விபத்தில் சிறுவர்கள் வினிஷ் (12), விஷ்வா (12) ஆகியோர் உயிரிழந்த சோகம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது




## மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 117 புள்ளிகள் உயர்வு!!

மும்பை:மே,21-

மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 117 புள்ளிகள் உயர்ந்து 75,318 புள்ளிகளானது. வர்த்தகம் தொடங்கியதில் இருந்து ஏற்ற இறக்கங்களுடன் காணப்பட்ட பங்குச் சந்தை 0.16% உயர்ந்து முடிந்தது. தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 41 புள்ளிகள் உயர்ந்து 23,659 புள்ளிகளானது

## கன்னியாகுமரி சென்னை எழும்பூர் விரைவு ரயில் புறப்படும் நேரம் மாற்றம்: தெற்கு ரயில்வே

சென்னை:மே,21-

கன்னியாகுமரி சென்னை எழும்பூர் விரைவு ரயில் புறப்படும் நேரம் மாற்றம் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. குமரியில் இருந்து மாலை 6 மணிக்கு புறப்படும் ரயில் இரவு 8.15க்கு புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161